<u>சாட்சிகளின் வாக்குமூலம்.</u>

<u>பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( l) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.</u>

**<u>அசல் வழக்கு எண்.50/2022</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - | வா.சா.1 | தொடங்கும் நேரம் | : | 12.02 p.m. |
| | | | முடிவுறும் நேரம் | : | 12.12 p.m. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தயாளன் | மதம் | : | |
| த/பெ. | : | சின்னபையன் | தொழில் | : | |
| கிராமம் | : | தண்டலம் | வயது | : | |
| தாலுக்கா | : | | நாள் | : | **09-07-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **09**ஆம் நாள் சாட்சியம்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **17.04.2022** | **தேதியிட்ட சின்னபைய கவுண்டர் பெயரில் உள்ள சிட்டா (பட்டா எண்கள். 339,512,1021,1370) - எண்ணிக்கை - 4 - கணிணி நகல்** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **17.04.2022** | **தேதியிட்ட 6ம் பிரதிவாதி பெயரில் உள்ள சிட்டா. (பட்டா எண்.1446) - கணிணி நகல்** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **25.04.2010** | **தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **14.02.2022** | **தேதியிட்ட வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்.** | **வா.த.சா.ஆ.4.** |

| | | | |
|---|---|---|---|
| **05.** | **--** | **அஞ்சல் ரசீதுகள் - எண்ணிக்கை-7 - அசல்.** | **வா.த.சா.ஆ.5.** |
| **06.** | **--** | **வாதி தன் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதை 1,3,5,6,7 பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறை - எண்ணிக்கை-5.** | **வா.த.சா.ஆ.6.** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.
(**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேறு ஒரு வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது**).

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.